some lines are replaced with dotted lines to protect the copyrights

மதிப்பெண்கள்: 70

# தேர்வுத்தாள் - 1

**A1 <u>மரபுத்தொடர்கள், இணைமொழிகள்</u> (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

Q1 கணிதத் தேர்வில் வினாக்களைச் சரியாக வாசிக்காமல் ______________ விடையெழுதிய மாலா தோல்வி அடைந்தாள்.

Q2 சீதாவும், கீதாவும் அன்று முதல் இன்று வரை ஒருவருக்கொருவர் ______________ வாழ்ந்து வருகிறார்கள்.

Q3 ------------------------------------------------------------------------------------------------------------------------ ----------------------------

Q4 ------------------------------------------------------------------------------------------------------------------------ ----------------------------

Q5 நம் முன்னோர்கள் விரோதிகளைக் கூட ______________ மன்னிக்கும் பண்பைக் கொண்டிருந்ததாலே இன்றுவரை போற்றப்படுகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| (1) | பழி வாங்காமல் | (2) | வெட்டிப் பேச்சில் |
| (3) | ஒப்புயர்வற்ற | (4) | ஒட்டி உலர்ந்த |
| (5) | தலைமேற்கொண்ட | (6) | அவசரக்குடுக்கையாக |
| (7) | அள்ளியிறைத்த | (8) | விட்டுக்கொடுத்து |
| (9) | கண்டதையும் கேட்டதையும் | (10) | ஒத்துப்பாடிய |

some lines are replaced with dotted lines to protect the copyrights

A2 <u>வாக்கியங்களை முடித்தெழுதுதல்</u> (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்து எழுதவும். அவ்வாறு முடிக்கப் பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். உன் விடைகளை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

Q6 குழந்தைகளிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்க்க பல்வேறு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு வங்கிகள் செயல்படுவது ________________ ________________________________________________________________________.

Q7 தனிமனிதன் துன்பமின்றி இன்பமாக வாழ நல்ல குடும்பம் இன்றியமையாதது. நல்ல குடும்பம் இருந்தால்தான் ____________________________ ________________________________________________________________________.

Q8 ------------------------------------------------------------------------------------------------------------------------------------------ ---------------------------

Q9 ------------------------------------------------------------------------------------------------------------------------------------------ ---------------------------

Q10 அறிவியல் பெருக்கமும், தொழில்நுட்ப வளர்ச்சியுமே இன்று மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன. இன்று மனிதன் கட்டுப்படுவதற்கு ______________________ ________________________________________________________________________.

some lines are replaced with dotted lines to protect the copyrights

A3 **அமைப்புச்சொற்கள்** (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச்சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பார்கள். ஆனால், இன்றைய காலக்கட்டத்தில் ஒற்றுமை என்பதற்குப் பொருள் என்ன? என்று கேட்கிறார்கள். இதனால் குடும்பத்திலும், அலுவலகளிலும் ஏன் நண்பர்களிடத்திலும் கூட பல..............................................................................................................................................................................

..............................................................................................................................................................................

..............................................................................................................................................................................

ஒற்றுமையை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் நாம் பிறரிடம் ஒரு வெளிப்படையான மனிதனாக இருக்க வேண்டும். எப்பொழுதும் நம்மைப் பற்றி நினைக்காமல் அடுத்தவர்களிடத்தில் நம்மை வைத்துப் பார்த்துச் சிந்திக்க வேண்டும். ஒருவரைப் பற்றி (Q13)________________ சொல்லும்போது மூன்று முறையாவது யோசிக்க வேண்டும். பிறரின் முன் வைத்து யாரையும் குறை சொல்லக் கூடாது. அவ்வாறு குறை கூறினாலும் அவர்களை (Q14)________________ அழைத்துக் கூற வேண்டும். ஒவ்வொருவரிடமும் சில நல்ல பழக்கங்களும், குணங்களும் இருக்கும். அவற்றை அறிந்து அவர்களைப் பாராட்ட வேண்டும். இம்முறைகளில் ஒருவர்

..............................................................................................................................................................................

.................................................................................................

| | | | |
|---|---|---|---|
| (1) | குறை | (2) | தனியாக |
| (3) | வெல்லலாம் | (4) | சண்டைகள் |
| (5) | பொதுவாக | (6) | நினைக்காமல் |
| (7) | புகார் | (8) | கருத்து |
| (9) | பிரச்சினைகள் | (10) | நினைப்பவர்கள் |


some lines are replaced with dotted lines to protect the copyrights

## “ஆ” பிரிவு

**B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதிகளைக் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

**பகுதி 1**



காலம் செல்லச் செல்ல வாழ்க்கை படிப்படியே மாறி வருகிறது. வாழ்க்கையை ஒட்டிய கருத்துகளும் மெல்ல மெல்ல மாறி வருகின்றன. உண்பது, ------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

தாமரைக் குளத்தையே நம்பி வாழ்ந்த அன்னப்பறவையின் இனம் அழிந்து போனது. ஆனால், எங்கும் வாழலாம், எப்படியும் வாழலாம் என்று எண்ணி வாழ்க்கையை நடத்தும் காக்கை இனம் பெருகி வருகிறது. ஆகவே, சூழ்நிலைக்கேற்ப மாறுதல் செய்துகொள்ளும் திறமையைப் பெற்றிருப்பது வாழ்க்கையின் அடிப்படை விதிகளில் ஒன்றாகும். -----------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

இன்று நாம் அலங்காரம் செய்துகொள்ளும் முறைக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. அவை எல்லாம் புறத்தே நிகழ்ந்த மாறுதல்கள். மனிதன்

some lines are replaced with dotted lines to protect the copyrights

மனம் உடையவனாக இருப்பதால் இன்ப, துன்பங்களை உணர்ந்து வாழ்ந்து வருகிறான். ஆகவே, மனிதன் காலத்திற்கேற்ப மாறுதல்களைச் செய்யக் கடமைப்படுகின்றான்.

**<u>வினாக்கள்</u>**

Q16 மனிதனின் புறவாழ்க்கையில் தோன்றும் மாறுதல்களை எவ்வாறு அறியலாம்?

(1) மனிதனின் உணவு, உடை ஆகியவற்றின் மூலம்

(2) மனிதனின் பழக்கவழக்கங்கள் மூலம்

(3) மனிதனின் உணர்வுகள் மூலம்

(4) மனிதன் கொண்டுள்ள கருத்துள்ள மூலம் ( )

Q17 அக்காலத் தமிழருக்கும், இக்காலத் தமிழருக்கும் இடையே எவற்றில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன?

(1) அவர்களுடைய சுற்றுப்புறச் சூழல்களில்

(2) அவர்கள் காலத்தைப் புரிந்துகொள்வதில்

(3) அவர்களின் வாழ்க்கை முறைகளில்

(4) அவர்கள் உடை உடுத்தும் முறைகளில் ( )

some lines are replaced with dotted lines to protect the copyrights

**பகுதி 2**




நேரம் வேகமாக ஓடி மறைந்து வருகிறது என்று அனைவரும் சொல்லி வருகிறார்கள். அந்த நேரத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் நஷ்டம் நேரத்துக்கு அல்ல, ------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

உங்களுடைய மீதி 75 வருட வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும்.

நீங்கள் உங்கள் முதல் 25 வருட காலத்தை வம்பு பேசுவதிலும், சோம்பேறித்தனமாக வாழ்வதிலும், உறங்குவதிலும் கழித்திருந்தால், உங்களுடைய மீதி வாழ்க்கை வேதனை நிறைந்ததாக அமைந்துவிடும்' என்ற ஓர் அறிஞருடைய கூற்று உண்மையாக நடக்கக்கூடிய ஒன்றாகும். ------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

வாழ்க்கை என்பது நேரத்தைக்கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த உலகத்தில் வாழப்போவதே சில காலத்திற்குத்தான். கெடுதலைத் தரும் தேவையற்ற கவலைகளை வரவழைத்துக்கொண்டு நம் நேரத்தை வீணாக்கி வருவது முட்டாள்தனம். விரோதம், வெறுப்பு, சண்டை, கோபம் போன்றவற்றை நம்மிடம் வரவழைத்துக்கொண்டு நாம் நம் நேரத்தைப் பாழடித்து வந்தால் நமக்கு முன்னேற்றம் கிடைக்காது. பயம், தோல்வி, கலக்கம், சந்தேகம், அவநம்பிக்கை போன்றவற்றைத் தரும் எண்ணங்களை வரவழைத்துக்கொண்டு கோழையாக மாறி நின்றால், மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை நாம் கட்டாயம் இழந்துவிடத்தான் வேண்டியிருக்கும்.

some lines are replaced with dotted lines to protect the copyrights

**வினாக்கள்**

Q18 ஒருவருடைய வாழ்க்கையின் பெரும்பகுதி வேதனை மிக்கதாக அமைவதற்குக் காரணம் என்ன?

(1) நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளாதது

(2) தொடக்கக் காலத்தில் பாடுபட்டு உழைக்காதது

(3) பிற்காலத்தில் சோம்பேறித்தனமாக வாழ்வது

(4) வம்பு பேசுவதிலும், உறங்குவதிலும் நேரத்தைக் கழிப்பது ( )

Q19 நாம் எப்போது சாதனைகளைப் படைக்க முடியும்?

(1) மற்றவர்கள் புகழும்படி வாழ்ந்து காட்டும்போது

(2) பலவற்றையும் உண்மையிலேயே இழந்திருக்கும்போது

(3) பலவற்றையும் உண்மையிலேயே இழக்காதபோது

(4) வருங்காலத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும்போது ( )

Q20 மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை ஒருவன் இழக்காமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

(1) தேவையான விஷயங்களில் கவலைகொள்ள வேண்டும்

(2) வருங்காலம் சிறியது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்

(3) தேவையற்ற கவலைகளில் மூழ்காமல் இருக்க வேண்டும்


(4) தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் இருக்க வேண்டும் ( )

some lines are replaced with dotted lines to protect the copyrights

## <u>"இ" பிரிவு</u>

**C5 <u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்தநடையில் விடை எழுதவும்.**



ஒவ்வொரு தலைமுறையிலுமே தலைமுறை இடைவெளி என்பது ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது. இன்று ஒவ்வொரு குடும்பத்திலும், வளர்ந்த பெரியவர்களும் இருப்பர். வளர்ந்து வரும் இளையோர்களும் இருப்பர். இந்த இரண்டு **<u>தரப்பினர்களுக்கும்</u>** இடையில் மனநிலைகள் மற்றும் அணுகுமுறைகள் தொடர்பாக ஏற்படும் கருத்து வேறுபாடுகள் தான் தலைமுறை இடைவெளி எனப்படுகிறது. உண்மையில் தலைமுறை இடைவெளி எனப்படுகிறது. உண்மையில் தலைமுறை இடைவெளி தொடர்பான பிரச்சினைகளுக்குப் பெரியவர்கள், குழந்தைகள் ஆகிய இருதரப்பினருமே சம அளவில் காரணமாக இருக்கின்றனர். ---------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

இளைஞர்கள் எப்படி வளர்கின்றனர் என்பது, பெற்றோர்கள் அவர்களை எப்படி வளர்க்கின்றனர் என்பதைப் பொருத்ததுதான். இருப்பினும், இன்றைய இளைஞர்கள் தங்கள் பெற்றோருடன் பழகும் நேரத்தைவிட, வெளி உலகில் பழகும் நேரமே அதிகம். அதோடு, இன்று மக்கள் தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும், வளர்ச்சியும் காரணமாக நம்முடைய வாழ்க்கை முறையைவிட முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை முறைகள் பற்றியும் அவர்கள் தெரிந்துகொள்ள அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், மனித வாழ்க்கை முறை என்பது

some lines are replaced with dotted lines to protect the copyrights

இயற்கையானது அல்ல என்பதையும், ---------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

பெரியவர்கள் இதனைக் கண்டு சமுதாயமே **சீரழிந்து** விட்டதாக எண்ணி ஆத்திரமடைகின்றனர். இது சூழ்நிலை மாற்றத்தால் இன்றைய இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ள ஒரு மாற்றம் என்பதைப் புரிந்துகொள்ள அவர்கள் மறுக்கின்றனர். சமுதாய மாற்றத்தால் மனிதர்களே வாழ முடியாது என்னும் நிலை உருவானால்தான் அது **கேடு**. மனித வாழ்க்கைக்கு உதவக்கூடிய சமுதாய மாற்றம் கேடு அல்ல. அது மனநிலைகளிலும், ---------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

இதுபோன்ற பிரச்சினைகளைத் **தவிர்க்க**, பெற்றோர்கள் தங்களுடைய குடும்பத்தின் உண்மையான பொருளாதார நிலை பற்றி அவ்வப்போது குழந்தைகளுக்கு எடுத்துக்கூற வேண்டும். தங்களுடைய பண்பாடு மற்றும் சம்பிரதாயங்களின் பெருமைகளை விளக்க வேண்டும். எதையும் புரியும் வகையில் பொறுமையாகவும், நிதானமாகவும் கூறினால் குழந்தைகள் விரைவில் புரிந்து கொள்வர். ஒருமுறை கூறியதும் விரைவில் புரிந்துகொள்ள வேண்டுமென ஆத்திரப்படக் கூடாது. அவர்களின் போக்கிற்கேற்ப நாமும் மாறிக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் எடுத்ததற்கெல்லாம் தவறு கண்டுபிடிப்பதும், -------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

some lines are replaced with dotted lines to protect the copyrights

**வினாக்கள்** **(25 மதிப்பெண்கள்)**

Q21 இன்றைய குடும்பங்களில் உள்ள பிரச்சினைகளாகக் கட்டுரையாசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்? (5 மதிப்பெண்கள்)

Q22 தலைமுறை இடைவெளி எதனால் உருவாகின்றன என நீ நினைக்கிறாய்? (4 மதிப்பெண்கள்)

Q23 'இன்று இளைஞர்கள் பெற்றோருடன் பழகும் நேரத்தைவிட வெளி உலகில் பழகும் நேரமே அதிகம்' என்று கூறக்காரணம் என்ன? (5 மதிப்பெண்கள்)

some lines are replaced with dotted lines to protect the copyrights

Q24 நம் மூத்தோர்கள் எதனை விளங்கிக் கொள்ள வேண்டும்? (5 மதிப்பெண்கள்)

Q25 தலைமுறை இடைவெளி பிரச்சினைகளை நீக்குவதற்கான வழிமுறைகளை விளக்குக. (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம் பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக. (5 மதிப்பெண்கள்)**

Q26 தரப்பினர்களுக்கும் - __________

Q27 சீரழிந்து - __________

Q28 கேடு - __________

Q29 தவிர்க்க - __________

Q30 வகுக்கும் - __________

**some lines are replaced with dotted lines to protect the copyrights**

## தேர்வுத்தாள் 1

<u>அருஞ்சொற்கள் (Listing for difficult words throughout the worksheets):</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | இட்டு | - | அழைத்து (Call) |
| 2 | விரோதிகளை | - | பகைவர்களை (Enemies) |
| 3 | இன்றியமையாதது | - | முக்கியமானது (Important) |
| 4 | திகழ்ந்தார் | - | விளங்கினார் (Branched) |
| 5 | கோலாகலமாக | - | சிறப்பாக (Grand) |
| 6 | கட்டுப்படுத்துகின்றன | - | ஓர் எல்லைக்குள் சிக்க வைக்கின்றன (Control) |
| 7 | அலுவல்களிலும் | - | வேலைகளிலும் (Job) |
| 8 | மாறுதல்களை | - | மாற்றங்களை (Changes) |
| 9 | சூழ்நிலைக்கேற்ப | - | வசதிக்கேற்ப (Situation) |
| | 10 to 15 - hided for copyrights reason | | |
| 16 | மனநிலைகளும் | - | எண்ணங்களும் (Thoughts) |
| 17 | தலைமுறை | - | பரம்பரை (Generation) |
| 18 | பொருளாதார நிலை | - | பணச்சூழல் (Economic Situation) |
| 19 | பண்பாடு | - | கலாச்சாரம் (Culture) |
| 20 | சம்பிரதாயங்களின் | - | சடங்குகளின் (Traditional) |